முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அம்பிகானந்தர் அருளிய அருள் பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

18.09.2019, புதன்கிழமை

1. **சோடைகளை போக்கிட வருகவருக**
**சுத்தநெறி வளர்ந்திட வருகவருக**
**தடைகளை வென்று தருமவான்கள்**
**தருமம் பெருக்கிட வருகவருக**
2. வருகவருக அரங்க ஞானியே
வருகவருக மாதவ யோகியே
முருகப்பெருமானே உன்னுள் கலந்து
முழுமை ஞானமாக அருளி வருக
3. வருகவே உன் வழி உலகம்
வளமுறும் வலுப்பெறும் என்று கூறி
பெருமைபட **விகாரி நங்கை திங்கள்**
**புகலுவேன் ஏகதிகதி புந்தி வாரம்**
**(விகாரி வருடம் புரட்டாசி மாதம் 1ம் தேதி, 18.09.2019, புதன்கிழமை)**
4. **வாரமதில் அம்பிகானந்தர் யானும்**
வழங்குவேன் அருள் பிரசன்ன ஆசி
பாரதம் தன்னிறை பலவழியும்
பசுமைவளம் பொருள் வளம் பெருக
5. பெருகவே அரங்க ஞானியரின்
பெருந்தயவுக் கொள்கை ஆளுமையில்
முருகா என வணங்கி ஏற்கப்பட்டு
மொழிகுவேன் மக்களை நோக்கிய
6. நோக்கிய தயவான ஆட்சியாக
நிலமதனில் மாற்றம் காணவே
தேக்கிய ஊழல் நிதிகளெல்லாம்
தேசநலம் வளர்ச்சிக்காக செலவிடப்படவே
7. ஆகவே சிறு குறுந்தொழில் முதல்
அனைத்து உயர் ஜீவனங்களும்
மிகைபட வளர்ந்து மலர்ந்து
மாதன புழக்கம் மக்களிடை வரும்
8. வருகவே உள்நாட்டு உற்பத்தி
வளர உயர வணிகம் பெருக
பெருமளவில் இருக்கும் சரிவுகள்
பிரச்சனையின்றி முடிவு கண்டு
9. கண்டுமே பரதம் தன்னிறைவு
காணக் கூடும் ஜீவனவகை
உண்டான வளர்ச்சி மிகுந்து
ஊழல் ஒழிந்து செழுமை காணும்

10. காணவே அரங்கன் காட்டும்
கண்ணியமான பரோபகார வழி
ஞானமுடன் மக்களிடை இனி
நல்லாட்சி ஞான ஆட்சி மலர

11. மலரவகை செய்யும் முழுமைபட
மகான் அரங்கன் வழி சரணடைவு
வளரும் தலைநிமிரும் உலகளவில்
வழங்கிய அருள் பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் அம்பிகானந்தர் அருளிய அருள் பிரசன்ன ஆசி நூலின் சாரம்**

உலகினில் உள்ள குற்றங்களைப் போக்கிட வருக வருக, உலகினில் தூய நெறியினை வளர்த்திட வருக வருக, தடைகள் யாவற்றையும் வென்று தருமவான்கள் தருமம் பெருக்கி தருமஉலகமாக ஆக்க வருக வருக, ஆறுமுக அரங்கமகா தேசிக மகா ஞானியே வருக வருக, மகாதவசியே மாதவயோகியே வருக வருக, முருகப்பெருமானே உம்முள் கலந்து முழுமை ஞானமாக அருளி வருகின்றபடியினாலே அரங்கா உமது ஞானவழியினை பின்பற்றி வர, உலகம் வளமுறும் வலுப்பெறும் என்று கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் புரட்டாசி மாதம் முதல் நாள் 18.09.2019, புதன்கிழமையான இன்றைய தினமதனிலே அருள் பிரசன்ன ஆசி நூல்தனையே அம்பிகானந்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அம்பிகானந்தர்.

பாரததேசம் பல வழிகளிலும் தன்னிறைவு அடைந்திடவும் பசுமை வளமும் பொருள் வளமும் பெருகிடவும், ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பெருந்தயவுக் கொள்கை நாட்டினை ஆட்சி செய்திடல் வேண்டும். அரங்கரின் பெருந்தயவுக் கொள்கை முருகா என வணங்கியே மக்களால் ஏற்கப்பட்டு மக்களை நோக்கிய தயவுடைய மக்கள் நலன் ஆட்சியாக உலகினில் மாற்றம் காண வேண்டும்.

அநீதிவழி சென்று ஈட்டிய ஊழல் பொருள்களை எல்லாம் ஊழல் செய்தோர் தேசநலன் கருதி அந்நிதிகள் எல்லாம் தேசநலனிற்காக செலவிடப்பட வேண்டும். அவ்விதம் செலவிடப்பட்டால் சிறுதொழில் முதல் எல்லாவகையான தொழில்களும் வளர்ச்சியடைந்து மக்களின் ஜீவன ஆதாரங்கள் பெருகி வளர்ந்து நாட்டினில் பணப்புழக்கம் மக்களிடையே பெருகிடும்.

உள்நாட்டு உற்பத்திகள் அதிகரித்து வணிகம் பெருக்கம் அடைந்திட்டால் பெருமளவில் உள்ள பொருளாதார சரிவுகள் எல்லாம் பிரச்சனைகள் இன்றி முடிவு காண்கும். பாரததேசம் தன்னிறைவைக் காணக் கூடும்.

மக்களின் ஜீவாதாரங்கள் பெருகி வளர்ச்சி அடைந்து கண்ணியமான முறையில் தயவு கொள்கை ஞானத்துடன் இனிமேலாகினும் மக்களிடையே பரவி தேசத்தில் ஞானஆட்சி மலர்ந்திட வழிவகை செய்யும். மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகரிடம் மக்கள் சரணடைவு கொள்ள தேசம் வளரும் தலைநிமிரும் உலகளவில் தனிப்பெரும் இடத்தை பெறும் எனக் கூறுகிறார் மகான் அம்பிகானந்தர்.

–சுபம்–